**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**
**Crl.M.P.No.341/2026**

அய்யப்பன்,
த/பெ.சித்திரவேலு ,
நடுத்தெரு, புதுக்குடி,
மணமேல்குடி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ..... மனுதாரர்/எதிரி

//எதிர்//

அரசுக்காக,
வனச்சரக அலுவலர்,
அறந்தாங்கி வனச்சரகம்,
அறந்தாங்கி. ..... எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இராஜேந்திரன், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை II அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்........

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/எதிரி தரப்பில் BNSS பிரிவு 480 இன் கீழ் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/எதிரி தரப்பு மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் தரப்பில், மனுதாரர்/எதிரி மீது வனஉயிரின பாதுகாப்புச்சட்டம் 1972 மற்றும் திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 2022-ன் படி அட்டவணை I பிரிவுகள் 9, 39(1) a, b, d, 39(3) a, b, c, 40(2), 50 மற்றும் 51(1)-இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மனுதாரர்/எதிரி கைது செய்யப்பட்டு 05.03.2026 ஆம் தேதி

முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/எதிரி எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றும், மனுதாரர்/எதிரிக்கும் இந்த வழக்கின் குற்றசம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும், மனுதார்/எதிரியின் வருவாயை நம்பி அவரது குடும்பம் இருந்து வருகிறது என்றும், மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்க தக்க பிணையாளர்கள் தயாராக உள்ளனர் என்றும், மனுதாரர்/எதிரி சமூகம் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க தயாராக உள்ளார் என்றும், மனுதாரர்/எதிரி தரப்பில் சமூகம் நீதிமன்றத்தை தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் பிணை மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் கூறி மனுதாரர்/எதிரியை பிணையில் விடவேண்டுமென்றும் வாதிட்டார்.

**2) எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணை:**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்/எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், மனுதாரர்/எதிரி தொடர்குற்றங்கள் செய்ய வாய்ப்பு அதிகமாக இருக்கும் காரணத்தினாலும், இவருடன் தொடர்பில் இருப்பவர்களை பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதாலும், இவரை பிணையில் விட்டால் விசாரணைக்கு இடையூறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதாலும் மனுதாரர்/எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

3) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய வினா யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதாகும்.

**4) தீர்வு:**

4.1) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. குற்றத்தின் தன்மை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4.2) இவ்வழக்கின் எதிரி மீது கடல்பசு குட்டியினை வெட்டியது குறித்து அரசு தரப்பில் வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின்

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர்/எதிரியின் மீது முன் வழக்குகள் ஏதும் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே மனுதாரர்/எதிரியின் குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், மனுதாரர்/எதிரியின் மீது முன் வழக்குகள் ஏதும் இல்லை என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரிக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிணை வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மனுதாரர்/எதிரி கடந்த 05.03.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் தன்மைகளை கருத்தில் கொண்டும், *"பிணை என்பது விதி, சிறை என்பது விதிவிலக்கு"* என்ற சட்ட விதியை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு பிணை வழங்கப்படுகிறது.

**முடிவாக,** பிணை மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரருக்கு 2 நபர்கள் தலா ரூ.10,000/-க்கு பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

2. மனுதாரர் பிணையில் வெளியே வந்த பின்பு அறந்தாங்கி வனச்சரக அலுவலகத்தில் 30 நாட்களுக்கு தினமும் காலை 10.00 மணிக்கு ஆஜராகி கையெழுத்திட்டு வரவேண்டும்.

3. மனுதாரர்கள் புலன் விசாரணை மற்றும் வழக்கு விசாரணைக்கு முறையாக ஆஜராக வேண்டும்.

4. மனுதாரர்கள் பிணையில் வெளியே வந்த பிறகு சாட்சிகளை மிரட்டக் கூடாது என்றும், சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

5. மனுதாரர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று உத்தரவிடப்படுகிறது.

6. மனுதாரர்/எதிரி பிணையில் வந்த பின்பு இவ்வழக்கு முடியும் வரை வெளிநாடுகளுக்கு செல்லக்கூடாது என்று உத்தரவிடப்படுகிறது.

எதிரி மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் எதிரிக்கு எதிராக மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான ***P.K.Shaji Vs. State of Kerala reported in (2005) AIR SC W 5560*** இன் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி எதிரி மீது நடவடிக்கைகள் எடுக்கலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–**
**எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.11 04:53:15 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**